உ
சிவமயம்

# கனடா-காரை கலாச்சார மன்றம்

## தமிழ்மொழித் திறன், பண்ணிசைப் போட்டி - 2019

## பேச்சு

**உயர் பிரிவு (தரம்,10,11,12)**

## அறிவியல் மேதை அப்துல் கலாம்

அறிவியல் மேதை அப்துல் கலாம் 1931ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15ம் திகதி பிறந்தார்.

மேதை அப்துல் கலாம் இராமேஸ்வரம் என்னும் சிறிய நகரில் பிறந்தார்.

அந்நாளில் பெருமைக்கும் புகழுக்கும் காரணமான சிவன்கோயில் அமைந்திருந்தது.

மேதை அப்துல் கலாம் அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரி என்போருடன் தனது குழந்தைப் பருவத்தை மகிழ்ச்சியுடன் களித்தார்.

மேதை அப்துல் கலாமின் தந்தை ஜைனுல்லாபுதின் தெய்வ பக்தி மிக்கவர்.

இவர் தன் குடும்பத்தினருக்குத் தேவையான அடிப்படை வசதிகளை குறைவில்லாமல் பூர்த்திசெய்தார்.

அப்துல் வீட்டிற்கு அருகே மிகவும் பழமையான மசூதி ஒன்று இருந்தது.

அங்குதான் அவருடைய குடும்பத்தினர் தொழுகையை நடத்தினர்.

அப்துல் கலாமின் தந்தை ஒருவன் பிரார்த்தனை செய்யும்போது இந்தப் பிரபஞ்சத்தின் ஓர் அங்கமாக மாறிவிடுகிறான் என்பதை உணர்ந்தார்.

படகில் அழைத்துச் சென்று திரும்பல்தான் அவர்களுடைய வருமானமாக விளங்கியது.

தனுஸ்கோடி இராமன் குளித்ததாகவும் அதனால் அந்த இடம் புனிதமடைந்ததாகவும் நம்பப்படுகிறது.

பக்தர்களை கரைசேர்க்க படகுப் போக்குவரத்து செய்துவந்ததில் நல்ல வருமானம் கிடைத்தது.

ஒருநாள் சூறாவளிப் புயற்காற்றில் அவர்களின் படகு சின்னா பின்னமானது.

நெருக்கடியில் அவரின் குடும்பம் தவித்துக்கொண்டிருந்தது.

அதனால் புளியங்கொட்டைகளைச் சேகரித்து வீட்டிற்கு அருகில் உள்ள கடையில் விற்பனை செய்தார்.

சகோதரன் சம்சுதீனுக்கு பிரபல தமிழ் நாளேடான தினமணியை விற்பனை செய்ய உதவினார்.

இரண்டாம் உலகப் போர் நடந்த காலத்தில் புகையிரதப் போக்குவரத்து தடைப்பட்டது.

இப்படித்தான் அப்துல் தனது முதல் சம்பாத்தியத்தைப் பெற்றார்.